# அரச சேவையில் சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வுசெய்து அனைத்து அரச துறையினதும் சம்பளங்களை மறுசீரமைப்பதற்கான நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை

**பின்னணி**

1.3 மில்லியனுக்குமதிகமான அரச ஊழியர்களினால் 22 மில்லியன் வரையிலான மக்களுக்கு அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகள் ஊடாக மிகவும் விரிவான சேவைகள் வழங்கப்படுகின்றன.

அரச சேவையில் சம்பளங்களுக்காக மொத்தம் வருடமொன்றுக்கு 1200 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம், சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக ஓய்வுதியத்துக்காக மேலும் 400 பில்லியன் ரூபா அரசாங்கத்தினால் செலவிடப்படுகின்றது.

நீண்ட காலம் தொடக்கம் அடிப்படைச் சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லையென்று அரச சேவையின் தொழிற்சங்கங்கள் ஊடாக பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருவதுடன், அந்தக் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு நாட்டுக்கு ஆகக்குறைந்தபட்ச செலவினம் ஏற்படும் வகையில் ஒட்டுமொத்தமான அரச சேவையினை உள்ளடக்கும் வகையில், ஒட்டுமொத்தமான அரச சேவையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மீளாய்வுசெய்து நடைமுறையில் உள்ள பொருளாதார எடுகோள்களுக்கமைய கவர்ச்சிகரமான சம்பள அளவுத்திட்டங்கள் மற்றும் கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்தி மிகவும் பயனுள்ள தரமான மற்றும் செயற்திறன் மிக்க அரச சேவையொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவைப்படும் முன்மொழிவுகளை எதிர்வரும் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்குவதற்காக வழங்குவது காலத்தின் தேவையாகும்.

அரசுக்கு ஏற்படக்கூடிய செலவுகளுக்கான சுமையை முடிந்தவரை குறைத்து சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை காலத்திற்கேற்றவாறு அதிகரிப்பதைப் போலவே வருமானங்களை ஈட்டக்கூடிய புதிய கருத்திட்டங்களை இனங்காண்பதும் அதற்கு இணையாக மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன் இதன் மூலம் திறைசேரிக்கு ஏற்க நேரிடும் மேலதிக செலவுக்கான சுமை குறையுமெனவும் குழுவினால் விசேடமாக இனங்காணப்பட்டுள்ளது.

அமைச்சரவையினால் 2024 மே மாதம் 27 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ள 24/பல்வகை (020) இலக்கமுள்ள அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, அரச சேவையிலுள்ள பல்வேறு ஊழியர் குழுக்களுக்கிடையில் காணப்படும் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து, 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்குள் அவற்றை உள்ளடக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய வகையில் அரச சேவையில் அனைத்துப் பிரிவுகளிலும் சம்பளம், ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வுசெய்து மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பான சில பரிந்துரைகளை முன்வைப்பதற்கான நிபுணர் குழுவினால் அரச துறையின் 91 பிரதான தொழிற்சங்கங்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோன்று, இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் குழுவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கிணங்க, தொழிற்சங்கங்கள், பல்வேறு அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் 371 பேரினால் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் இந்தத் தகவல்கள் மற்றும் முன்மொழிவுகள் முறையாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

அதன்படி, பின்வரும் எடுகோள்கள் மற்றும் அளவுகோள்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சேவைப் பிரிவுகளுக்கிடையில் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளில் நிலவும் முரண்பாடுகளை முடிந்தவரை குறைப்பதன் மூலம் அரச ஊழியர்களின் செயற்திறன், தரம் மற்றும் பயனுள்ளவாறான சேவை வழங்குதல் உயர்வடைவதால் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த முடியும் என்று குழு திடமாக நம்புகின்றது.

இதன்படி, அரச ஊழியர்களினால் மிகவும் திருப்திகரமான அரசாங்க சேவையொன்றை நிறைவேற்றக்கூடிய வகையில் நடைமுறையிலிருக்கும் பொருளாதார கட்டமைப்புகளுள் அரசுக்கு சுமக்கக்கூடியவாறு ஊழியர் சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்கக்கூடிய வகையில் சம்பளங்களை மீள் ஒழுங்கமைக்க கூடியவாறான சட்டகமொன்று எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரிக்கும் போது பின்வரும் அடிப்படை விடயங்களுக்கமைய கவனத்திற் கொள்வது மிகவும் பொருத்தமானதென குழு பரிந்துரை செய்துள்ளது.

1. ஓட்டுமொத்தமான அரச சேவையில் அனைத்து பதவிகளை, பிரதானமாக நான்கு (04) பிரிவுகளின் அடிப்படையில் வகைப்படுத்தி, அந்த ஒவ்வொரு பிரிவுகளையும், இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமம் (SLQF) மற்றும் தேசிய தொழில் நிபுணத்துவம் (NVQ) அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட தொழிலின் கடமைப்பொறுப்பு, பொறுப்புக்கள் மற்றும் விசேட தொழில்களுக்கான தொழிற்தேர்ச்சியுடைய ஊழியர்களைக் கவர்ந்திழுத்தல் மற்றும் அவர்களை தொழிலில் நிலைத்திருக்கச்செய்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஆட்சேர்ப்புக்கான தகைமைகளை பல உப பிரிவுகளாக வகைப்படுத்தல்.

2. ஆரம்ப சேவைப் பிரிவுகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் அடிப்படைத் தகைமைகளாக இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமம் (SLQF) மற்றும் தேசிய தொழில் நிபுணத்துவம் (NVQ) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சேவைகளின் தேவைகளுக்கமைய பொருத்தமான தெரிவு முறையொன்றைப் பின்பற்றுதல்.

3. ஏனைய அனைத்துச் சேவை பிரிவுகளுக்காக முறையான போட்டிப் பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் ஊடாக மாத்திரம் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளல்.

4. அதன்படி பொருத்தமானவாறு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் துரிதமாக திருத்துதல்.

5. 2025 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கருதி அனைத்து அரச ஊழியர்களுக்கும் (ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கொருமுறை திருத்தங்களை மேற்கொள்ளக் கூடியவாறு) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக Cost of Living (COL) மாதாந்தம் 25,000 ரூபாபடி செலுத்துதல்.

6. அரச சேவையின் ஆகக் குறைந்தபட்ச ஆரம்ப மாதாந்த சம்பளத்தை ஆகக் குறைந்தது 24% சதவீதத்தினால் அதிகரித்து வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் மொத்த சம்பளத்தை 55,000 ரூபாவாகக் கருதி ஏனைய சகல பதவிகளுக்குமான அடிப்படைச் சம்பளத்தை அதன்படி ஒழுங்கமைத்தல்.

7. வர்த்தக ரீதியான அரசாங்கக் கம்பனிகள் மற்றும் வங்கிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச நிறுவனங்களுக்காக இந்தப் புதிய சம்பளங்களையும் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய செயல்முறையொன்றை நடைமுறைப்படுத்துதல்.

8. இதன்படி 2025 ஆம் ஆண்டு தொடக்கம் 03 வருடங்களுக்குள் ஒட்டுமொத்த அரச சேவையில் உள்ள அனைத்துத் துறைகளையும் டிஜிட்டல் மயமாக்குதலும் **(Digitalization)** மற்றும் அவை சுயமாக செயற்படக்கூடிய வகையில் **(Automation)** இலத்திரனியல் கட்டமைப்புகளுடாக அரச நிர்வாகத்துக்கான வழிமுறையொன்றை **(E - Governance)** அறிமுகப்படுத்தலும் அதற்காக அரச முதலீட்டில் முன்னுரிமையினை வழங்குதலும்.

9. அரச சேவையில் அனைத்து அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய மாதாந்தம் ஆகக் குறைந்தபட்சம் 1000.00 ரூபா பங்களிப்புடன் கூடிய மிகவும் கவர்ச்சிகரமான பயன்களை பெறக்கூடிய வகையில் மருத்துவக் காப்புறுதி திட்டமொன்றை 2025 ஆண்டு சனவரி தொடக்கம் நடைமுறைப்படுத்துதல்.

10. இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெளிவாரி சேவைகள் போன்ற வழிமுறைகளுடாக **(Outsourcing)** அரசாங்கத்தின் செலவுச் சுமை கூடுமானளவு குறையும்படி செயற்திறனை உச்சளவுக்கு கொண்டு வரும் வகையில் அதற்கான விதிமுறைகளை பின்பற்றி சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.

11. இனங்காணப்படும் அரசாங்க திணைக்களங்கள் /கூட்டுத்தாபனங்கள் /நியதிச்சபைகள், பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்ட வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளாக **(Public Liability Company - PLC)** மாற்றியமைக்கக்கூடிய வகையில் அவற்றை மீள் ஒழுங்கமைப்புச் செய்வதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். (அரசாங்க, தனியார் முதலீடுகள், பொதுமக்கள் மற்றும் ஊழியர்களுக்கான பங்குரிமைகளுடன்)

12. முறையான வேலை கற்றிதல் ஒன்றின் மூலம் **(Work study)** ஒட்டுமொத்த அரச பிரிவைச் சேர்ந்த பணியாட்டொகுதியினர் மற்றும் சேவைகள் தொடர்பாக விஞ்ஞானபூர்வமான கற்றறிதல் ஒன்றை மேற்கொள்வதற்காக 2025 ஆம் ஆண்டுக்குள் நடவடிக்கை எடுத்தல்.

13. 2030 ஆம் ஆண்டாகும்போது அரசு சேவையில் ஒட்டுமொத்தமான பணியாட்டொகுதியை பத்து இலட்சம் (1,000,000.00) அல்லது அதற்குக் குறைந்த மட்டம் வரை வரையறுத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

14. அதன்படி அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்காக செயற்திறன் குறிகாட்டியொன்றைத் (**KPI**) தயாரித்து அதன் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பள ஏற்றத்தை வழங்குதல்.

15. இலவச சுகாதாரம் மற்றும் இலவச உயர் கல்வியை மிகவும் பாதுகாப்பான முறையில் சிறந்த தரத்துடன் பேணுவதுடன், அந்த துறைகளில் உள்ள பௌதீக மற்றும் மனித வளங்கள், நம்பகத்தன்மை உட்பட அங்கீகாரத்துடன் கூடிய துறைகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார பெறுமதியுள்ள சேவையொன்றை அறிமுகப்படுத்தல்.

16. 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் இளைப்பாறிய அரச ஊழியர்களுக்கு உரித்துடையதாக இருந்த சம்பள அதிகரிப்புகளை வழங்கி அவர்களது ஓய்வூதியத்தை மீள் ஒழுங்கமைத்து முரண்பாடுகளை தீர்த்துவைத்தல்.

17. இளைப்பாறியோருக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவினை, நிரந்தர சேவையில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் 50% வீதத்துக்குச் சமனாகும் வகையில் 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் வழங்குதல்.

18. தற்போது நடைமுறையில் உள்ள வரிக் கொள்கைத் திட்டங்களுக்குள் இந்த செலவுகளை முகாமைத்துவம் செய்தலுக்கு உட்படும் வகையில் இந்தச் சம்பள முறையை நடைமுறைப்படுத்தலும் உத்தேச சம்பள முறையை 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் அரசின் நிதி நிலைமையையும் கருத்திற்கொண்டு கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தல்.

| | | |
|---|---|---|
| **1.** | உதய ஆர். செனவிரத்ன<br>முன்னாள் சனாதிபதியின் செயலாளர் | குழுவின் தலைவர் |
| **2.** | ஜீ.எல். வர்ணன் பெரேரா<br>சனாதிபதியின் மேலதிக செயலாளர்,<br>சனாதிபதி அலுவலகம் | குழுவின் செயலாளர் |
| **3.** | ஜூட் நிலுக்ஷான்<br>பணிப்பாளர் நாயகம்,<br>தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் | குழு உறுப்பினர் |
| **4.** | ஹிறன்சா கலுதந்ரி<br>பணிப்பாளர் நாயகம்,<br>முகாமைத்துவ சேவைத் திணைக்களம் | குழு உறுப்பினர் |
| **5.** | எஸ். ஆலோக பண்டார<br>ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் | குழு உறுப்பினர் |
| **6.** | எச்.ஏ. சந்தன குமாரசிங்க<br>தாபனப் பணிப்பாளர் நாயகம் | குழு உறுப்பினர் |

7. வைத்தியர் டெரன்ஸ் காமிணி த சில்வா — குழு உறுப்பினர்
ஓய்வுபெற்ற பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
சுகாதார அமைச்சு

8. துமிந்த ஹுலங்கமுவ — குழு உறுப்பினர்
தலைவர், இலங்கை வர்த்தக சம்மேளனம்

9. சந்தி எச். தர்மரத்ன — குழு உறுப்பினர்
**Chief People Officer,**
**BCS International Technology PTY LTD**

10. இசுறு திலகவர்தன — குழு உறுப்பினர்
பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம்),
கொமர்ஷல் வங்கி